**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

முன்னிலை : **திரு.R.M.மாரிமுத்து, B.A., B.L., L.L.M.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருநெல்வேலி

2025ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 12ம் நாள் வெள்ளிக்கிழமை

**<u>இ.பி.எண்.54/2023 அதன் அ.வ.எண்.192/2012</u>**

1) ஷாஜகான், க/பெ.அவுலியா முகைதீன், 1/130, நடுத்தெரு, குறிச்சிகுளம் கிராமம், தெற்குபட்டி அஞ்சல், திருநெல்வேலி தாலுகா.

2) செய்யது அலி பாத்திமா, க/பெ.ஷாஜஹான், வயது 41, 1/130 நடுத்தெரு, குறிச்சிகுளம் கிராமம், தெற்குபட்டி அஞ்சல், திருநெல்வேலி தாலுகா.

... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

அப்துல் ஹக்கீம், த/பெ.முதார் கனி, வயது 58, க.எண்.1/132, 1/133, 1/134 குறிச்சிகுளம் கிராமம், தெற்குபட்டி அஞ்சல், திருநெல்வேலி தாலுகா.

...எதிர்மனுதாரர்/பிரதிவாதி

நிறைவேற்றுகை மனுவானது, உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 21 விதி 32 மற்றும் பிரிவு 151–ன் கீழ் மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இம்மனு தாக்கல் செய்த நாள்.21.06.2023

இந்த மனுவானது 12.09.2025 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்த போது, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.கோவிந்தன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.அபினேஷ் முருகேஷ் அவர்கள் ஆஜரானார். ஆனால் வாதுரை செய்யவில்லை. மனுதாரர் தரப்பு வாதங்களைக் கேட்டும் மற்றும் இரு தரப்பு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று வரை இந்நீதிமன்ற ஆய்விலிருந்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.....

**<u>உத்தரவாணை</u>**

| | |
|---|---|
| 1). | இந்த மனுவானது அனுமதிக்கப்பட்டு ஆணையிடப்படுகிறது. |
| 2). | Delivery batta in 3 days. Delivery on or before 06.10.2025 call on 07.10.2025. |
| 3). | இம்மனுவின் செலவு தொகையான ரூ. இல்லை/– மனுதாரர்களுக்கு, எதிர்மனுதாரர் செலுத்த வேண்டுமென ஆணையிடப்படுகிறது. |

(இருதரப்பிலும் செலவு விபர பட்டியல் தாக்கல் இல்லை)

**<u>1ம் தபசில்</u>**

திருநெல்வேலி தாலுகா, குறிச்சிகுளம் கிராமம், பழைய சர்வே எண்.49ன் பாகம் புதிய சர்வே எண்.188/39க்கு பரப்பு 0.01.55 மனையும் (1682.74 சதுர அடி) அதில் வடக்கே கட்டியுள்ள கதவு எண்.1/130 எண்ணுடைய கல்கட்டு ஓட்டடுக்கு வீடும், அந்த வீட்டின் மேல்புற சுவரை ஒட்டியுள்ள தென்வடல் 60 அடி கிழமேல் 3 அடி உள்ள கோடியும், அதன் உரிமைகளும் இதுவரை படத்தில் A B C D D1. E.E2.F.F1 என்று காட்டப்பட்டுள்ளது.

**<u>2வது தபசில்</u>**

திருநெல்வேலி தாலுகா, குறிச்சிகுளம் கிராமம், பழைய சர்வே எண்.49ன் பாகம் புதிய சர்வே எண்.188/39க்கு பரப்பு 0.01.55 அளவுள்ள மனையில் வடபாகம் கூடிய மனை கிழமேல் 29 அடி, தென்வடல் 30 அடி இதற்கு சதுரடி 870 உள்ள மனையும், ஷை மனையில் வடபுறமாக 20 சதுர மீட்டர் பரப்பளவில் தெற்கே பார்த்த மண் சுவர் ஒட்டுப்பிறை வீடும், அந்த வீட்டிலுள்ள மின் இணைப்பு எண்.649 சமஸ்தமும் – இது வரைபடத்தில் AB EF காட்டப்பட்டுள்ளது. இதன் மேல்புறம் 30 அடி நீளமும், 3 அடி அகலமுடைய தென்வடல் கோடியும், அதில் சகல பாத்தியங்களும் இதுவரை படத்தில் F.F1 – E.E2 என்று காட்டப்பட்டு உள்ளது இதற்கு எல்கை.

மேற்கு – அப்துல் ஹக்கீம் வீடு
கிழக்கு – சுல்தான் மைதீன் மனை வீட்டிற்கும் வாதிகள் வீட்டிற்கும் உள்ள தென்வடல் பொதுச்சுவர்
தெற்கு – நெசவு முகம் – நூர்தீனுக்குப் பாத்தியப்பட்ட காலி மனை
வடக்கு – கிழமேல் தெரு

**<u>3ம் தபசில்</u>**

திருநெல்வேலி தாலுகா, குறிச்சிகுளம் கிராமம், பழைய சர்வே எண்.49ன் பாகம் புதிய சர்வே எண்.188/39க்கு பரப்பு 0.01.55 அளவுள்ள மனையில் வடபாகம் கதவு எண்.1/130 ஓட்டடுக்கு வீட்டுடன் கூடிய மனை கிழமேல் 29 அடி, தென்வடல் 30 அடி இதற்கு சதுரடி 870 உள்ள 2ம் தபசில் சொத்து மனையில்,

a) தெற்கே மேல்புறம் E.E1 என்ற பகுதியில் 4 1/2 அடியும், கீழ்புறம் B–B1 என்ற பகுதியில் 3/4 அடியும் மத்தியில் 2 அடியும் ஆக்கிரமித்து கிழமேலாக கட்டப்பட்ட 29 அடி நீளம் 6 அடி உயரமுள்ள B1–E1 சுவரும், அந்த சுவரின் கீழ் ஓரத்தில் 4–1/4 அடி அகலமுள்ள B–B2 வாசலும்

b) மேற்படி 2ம் தபசில் சொத்து வீட்டின் மேல்புற சுவரை பழுது பார்க்கவும், வெள்ளை அடிக்கவும், மழைநீர் மற்றும் கழிவு நீர் போக்கவும், அந்த சுவரையொட்டி அமைந்துள்ள 3 அடி அகலம், 30 அடி நீளமுள்ள F.F1, F2 F3, E – E2 கோடி வழி இடமும், இந்த கோடியை அடைந்து F– F1 பகுதியில் கோடியில் 5 அடி உயரத்தில் 3 அடி அகலத்தில் கட்டியுள்ள அடைப்பு சுவரும் F–F2 பகுதியில் தென்வடலாக 9–1/4 அடி நீளத்தில் கட்டியுள்ள ஒற்றை செங்கல் சுவரும் விவரம் சரி.

2025 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 12ம் நாள் இந்நீதிமன்ற முத்திரையும் என்னுடைய கையொப்பமும் இடப்பட்டது.

MARIMUTHU R MUNIYASAMY

decree uploaded on 06.10.2025
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2025.10.06 11:30:39 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி.

முு.மா.உ.நீ, திருநெல்வேலி.
இ.பி.எண்.54/2023
அதன்
அ.வ.எண்.192/2012
உத்தரவாணை.
நாள் – 12.09.2025